முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 22 திகதி முதல்

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 29 திகதி வரை

(05.06.2022 ஞாயிறு முதல் 12.06.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மாதரும பலம் கொண்ட அரங்கா
   மக்களை தேற்றி காத்தருள
   பூதலத்தில் அவதாரம் புரிந்ததேசிகா
   புண்ணியனே எனஉமை போற்றி அகத்தியனும்
2. அகத்தியனும் வார ஆசிதன்னை
   அரங்கமகான் தானும் கேட்க
   செகத்தினில் இந்தியா தமிழகத்தில்
   சுபகிருது விடை திங்கள் தன்னில்
3. தன்னிலே இருபானீர்திகதிமேல் இருபான்நவ திகதிவரை
   தாமுரைப்பேன் நடக்கும் நிகழ்வாக
   இன்னாளின் எதிர்கால பலனுமாக உரைப்பேன்
   இந்தியா தமிழகம் நல்லுறவு கூடிட
4. கூடிட தேச வளர்ச்சிகளும்
   குறைவிலா தொழில் வளர்ச்சிகளும்
   ஈடேறி மாற்றம் காண்கும்
   எல்லா வகையும் பாதுகாப்பு பெருகும்
5. காப்புத்தரும் சகல துறைகளின்
   கண்டுரைப்பேன் தலைமை அதிகாரிகள்
   ஒப்பு கொண்டு மக்கள் சேவைக்கே
   உயர்வாய் வந்துள்ளேன் என உணர்ந்து
6. உணர்ந்து அடித்தட்டு மக்களுக்கும்
   உரிமை உதவி கிடைக்கும்படி
   உணர்வுபட சேவை ஆற்றிட
   ஊழல்வழி செல்லா தயவாக
7. தயவாக அரச விதிமுறைகள்
   தரணிவாழ் மக்கள் தேவையை
   தயவாக நடத்தித் தருவதற்கேயென
   தயவாக நடந்து சேவை ஆற்றினால்
8. ஆற்றினால் அந்தத்துறை வளருவதுடன்
   அதிகாரிகளும் வளர்ந்து நன்கு
   ஆற்றல் மிக்க ஆளுமைக்கும்
   அறிவிப்பேன் நன்மை சேர்ப்பர்

**9.** சேர்க்கவே எதிர்மறைகளும்
சேவை பெருக மாற்றமாகி
நேர்மை கொண்ட தலைமை
நீதிகாக்கும் ஆளுமை ஆகி
**10.** ஆகியே ஞானவான்கள் ஆட்சி
ஆறுமுகனார் ஆசிபட அமையும்
அகிலத்தார் அரங்கமகான் வழிவர
அற்புதம் இந்தியா தமிழகத்தில் துவங்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் வைகாசி மாதம் **22**ம் நாள் **05.06.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி **29**ம் நாள் **12.06.2022** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள்.

எல்லையில்லாது தர்மங்களை செய்து பெரும் தர்மபலம் மிக்க அரங்க மகானே இவ்வுலக மக்களை அறியாமையில் இருந்து மீட்டு கடைத்தேற்றி காத்து அருள் செய்திடவே இவ்வுலகினில் அவதரித்திட்ட அரங்க மகா தேசிகரே உம்மை போற்றி புகழ்ந்துமே அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூல்தனை அரங்க மகான் கேட்க உரைக்கின்றேன் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் வைகாசி மாதம் **22**ம் நாள் **05.06.2022** ஞாயிற்று கிழமை முதல் வைகாசி **29**ம் நாள் **12.06.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மத்தியும் மாநில அரசுகளும் இடையிலான நல்லுறவு பெருகிட நாட்டின் வளர்ச்சியும் எந்தவித குறைவும் இன்றி பெருகி தொழில்களும் வளர்ச்சி அடைந்து பெரும் மாற்றங்களை காணுமப்பா. சகல துறைகளும் பாதுகாப்பான நிலையை அடையும்.

துறைகளை நிர்வகிப்போர் தலைமை அதிகாரிகள் முழுமனதாய் சேவை மனப்பான்மையுடன் தொண்டுகளாக செய்திட வேண்டும். அடித்தட்டு மக்களுக்கும் அவரவர்க்கு உண்டான உரிமைகளை அவர்கள் பெறும்படியும் சகல உதவிகளையும் அவர் பெற்று பயனடையும் படியும் உணர்வுடன் சேவை செய்து வந்தால் அதிகாரிகள் ஊழல் வழியில் செல்லாமல் தயவுடன் நடப்பதோடு அரசின் விதிமுறைகளை பின்பற்றி நடந்து மக்களை தயவாக நடத்தி சேவை ஆற்றினால் அவர்களது துறைகள் எல்லாம் வளர்ச்சி அடைந்து ஆற்றல் மிக்க ஆட்சி முறைக்கும் பெரும் நன்மைகளை உண்டாக்குவார்கள்.

இவ்விதமான நடைமுறையில் நாட்டில் உள்ள எதிர்மறை செயல்களும் சேவை பெருக பெருக தானே மாற்றம் ஆகி நேர்மை உடையவர்களால் தலைமை உருவாகி ஆட்சி முறை நீதியை காக்கும் நீதி ஆட்சியாகி உலகினில் அறிவினிற் சிறந்த ஞான ஆட்சியாக ஞானிகள் ஆசியுடன் அமைந்து சிறக்கும்.

உலகோர் ஞானிகள் கூறும் வழிமுறையாம் ஆறுமுக அரங்க மகான் அருளும் தூய ஞான நெறிமுறைகளை ஏற்று கடைபிடித்து துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகானை பின்தொடர்ந்திட அற்புதங்களை இந்தியா தமிழகம் காணும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–